# பெண்கள் ஆவணகம்

## ஆண்டறிக்கை 2019/ 2020/2021

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | பெண்கள் ஆவணகம் 2019/2020/2021 |
| செயற்றிட்ட எண் | NF/PG/2019/0065 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்டக் காலம் | மார்கழி 2020 - மார்கழி 2021 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | லண்டன் தமிழ் பெண்கள் அமையம், ஊடறு |
| முக்கிய பங்குத்தாரர்கள் | லண்டன் தமிழ் பெண்கள் அமையம், ஊடறு எழுத்தாளர்கள், ஆவணச் சேகரிப்பாளர்கள், தன்னார்வலர்கள் |
| செயற்றிட்டச் செலவுகள் | 2019 - LKR 180,000.00<br>2020 - LKR 106,306.50<br>2021 - LKR 406,490.00 |

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான எல்லா வகையான அறிவுத் தொகுதிகளையும் ஆவணப்படுத்தி எண்ணிம வகையில் பாதுகாத்து அனைவருக்கும் கிடைக்கச் செய்யும் முயற்சியில் ஈடுபடும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஆகும். சாதி, சமய, இனக் கட்டமைப்புக்கள், சமூகத்தில் நிலவிய/நிலவும் ஆணாதிக்க செல்வாக்குக்கள், குடியேற்றவாத ஆட்சி போன்ற பல்வேறு காரணங்களால் பல்வேறு அறிவுத் தொகுதிகள் ஆவணப்படுத்தப்படவில்லை பேணப்படவில்லை. அண்மைக்காலத்தில் இடம் பெற்ற உள்நாட்டு யுத்தம், நவீனமயமாக்கம், போதிய அளவு விழிப்புணர்வு இன்மை போன்றவற்றாலும் பெறுமதிமிக்க அறிவு வளங்கள் இழக்கப்பட்டுள்ளன.

ஆவணப்படுத்தல், ஆவணகப்படுத்தல், அணுக்கப்படுத்தல் ஒரு சமூகத்தோடு நெருங்கிய தொடர்புடைய பணிகள் ஆகும். சமூகத்தில் இருக்கக் கூடிய அரசியல், அதிகார, பண்பாட்டு சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு, முற்போக்கான ஒரு சட்டகத்தில் தனது பணிகளை முன்னெடுக்க நூலக நிறுவனம் உறுதிபூண்டுள்ளது. அந்த வகையில் கூடிய அழிவாபத்துக்கு உட்பட்ட, போதிய கவனிப்புக்கள் பெறாத, சமூகச் சூழ்நிலைகளால் புறக்கணிக்கப்பட்ட சேகரங்கள் தொடர்பாக நூலக நிறுவனம் சிறப்புச் செயற்திட்டங்களை வடிவமைத்து முன்னெடுத்து வருகின்றது. பெண்கள் ஆவணகம் ஒரு சிறப்புச் செயற்திட்டம் ஆகும்.

நோக்கங்கள்

இலங்கைத் தமிழ் பேசும் பெண்களின் குரல்களை, கதைகளை, வாழ்வியலை, சவால்களை, பங்களிப்புக்களை, சாதனைகளை, வரலாறுகளை ஆவணப்படுத்தி

அனைவரோடும் பகிர்ந்து பெண்களின் எழுச்சிக்கு வலுவூட்டல் என்பது இந்தச் செயற்திட்டத்தின் தொலைநோக்கு ஆகும். இச் செயற்திட்டம் குறிப்பான பின்வரும் நோக்கங்களைக் கொண்டது:

- இலங்கைத் தமிழ் பேசும் பெண்களின், பெண்கள் தொடர்பான ஆவணங்களை அடையாளம் காணல், நூலக சீர்தரங்களுக்கு ஏற்ப பட்டியலாக்கம் செய்தல், எண்ணிம வகையில் பாதுகாத்தல், காப்புரிமை அனுமதி பெற்று கட்டற்று அணுக்கம் தருதல்.
- எழுத்தாவணங்களில் உள்ளடக்கப்படாத விடயப் பரப்புகளை வாய்மொழி வரலாறுகள், வாழ்க்கை வரலாறுகள், பல்லூடக ஆவணப்படுத்தல் உட்பட்ட வழிமுறைகள் ஊடாக ஆவணப்படுத்தல், அத்தகைய ஆவணப்படுத்தல் பணிகளுக்கு உதவுதல்.
- இலங்கைத் தமிழ் பேசும் பெண்களின், பெண்கள் தொடர்பான கற்றல், கற்பித்தல், ஆய்வுப் பணிகளுக்கு ஆதரவு தருதல்.
- ஆவணப்படுத்தல், ஆவணகப்படுத்தல் பணிகள் ஊடாக இச் செயற்பாடுகளில் உள்ள தடைகளை, வாய்ப்புக்களை, அனுபவங்களை, கற்றல்களைப் பகிர்தல்.

நூலக நிறுவனத்தின் பெண்கள் ஆவணகம்

நூலக நிறுவனத்தின் பெண்கள் ஆவணகச் செயற்பாடுகள் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பெண்கள் எழுதிய நூல்கள், இதழ்கள் ஆகியனவற்றை எண்ணிம வழியில் பாதுகாத்து அணுக்கப்படுத்தல், வாழ்க்கை வரலாறுகள் தொகுத்தல், வாய்மொழி வரலாற்று ஆவணப்படுத்தல் ஆகியனவே முதன்மைப் பணிகளாக இதுவரை முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன. பெண்கள் தொடர்பான பல ஆவணங்கள் அவ்வாறு வகைப்படுப்படாமல் உள்ளன என்பது இங்கு முக்கியமாக குறிப்பிட வேண்டியுள்ளது. ஆகையால் அவை புள்ளி விபரங்களில் முழுமையாக இடம்பெறவில்லை. 2020 யூன் 6 வரையான காலப்பகுதியில் பின்வரும் அடைவுகள் எட்டப்பட்டுள்ளன. நூல்கள் - 86, இதழ்கள் - 16, பிரசுரங்கள்- 11, குறுங்கால ஆவணங்கள் - 1, தனிநபர் ஆவணப் பதிவுகள் - 23, ஒளிப்படங்கள்- 2, வாழ்க்கை வரலாறுகள் - 742, நிறுவனங்கள் - 4 என்பனவாகும். இவற்றோடு லண்டன் தமிழ் பெண்கள் அமையம் மற்றும் ஊடறு ஆகிய ஒன்றியங்களின் நிதிப்பங்களிப்புடன் டிசம்பர் மாதம் 2020 இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

2020 டிசம்பர் - **2021** டிசம்பர் வரையான மொத்த அடைவுகள்

[பெண்கள் ஆவணகம் **2021** ஆண்டிற்கான பட்டியல்]

| | ஆவணங்கள் | குறிக்கோல் | அடைவுகள் |
|---|---|---|---|
| 1 | நூல்கள் | 100 | 93 |
| 2 | வாய்மொழி வரலாறுகள் | 12 | 18 |
| 3 | ஆளுமைகள் | 150 | 147 |
| 4 | ஓவியர்கள் | 12 | 13 |
| 5 | நிறுவனங்கள் | 12 | 09 |
| 6 | ஒளிப்படங்கள் | 60 | 60 |
| 7 | நிகழ்வுகள் | 12 | 05 |
| 8. | மாதாந்த கலந்துரையாடல்கள் | 12 | 12 |

| | | | |
|---|---|---|---|
| 9 | பெண்கள் ஆவணக கலந்துரையாடல்கள் | - | 2 |

எதிர்கொண்ட சவால்கள்

- இவ்வாண்டில் கோவிட் 19 காரணமாக அதிகமாக அடைவுகள் சார்ந்த விடயங்களை எட்டுவது கடினமாக அமைந்தது. குறிப்பாக மூன்று மாதங்கள் முழுமையாக வேலைகளை தொடர முடியாத நிலைமை காணப்பட்டது.
- புதிய அலுவலக இடமாற்றம் ஓர் சவாலான காரணியாக அமைந்தது.
- நூலக நிறுவனத்தின் தற்போதைய ஊழியர்கள் எண்ணிக்கையைக் கொண்டு குறிப்பிட்ட அளவு ஆவணங்களையே எண்ணிமப்படுத்த முடிந்தமை.மின்வருடுவதற்காக ஆவணங்கள் அதிகமாகவே கள ஆய்வாளரால் சேகரிக்கப்பட்டன. அவற்றை மின்வருடுவதற்கான மனிதவளப்பற்றாக்குறை ஓர் சவாலாக அமைந்தது.
- வாய்மொழி வரலாற்றை தொடர்ச்சியாக பெறுவதால் Recorder ஒன்றினை பயன்படுத்துவதால் ஏற்பட்ட கால தாமதம்.
- வாய்மொழி வரலாறு நிகழ்கலைக்கு அறிமுகம் செய்யப்பட்டு கோவிட் காரணமாக பெறப்பட்டது. அதற்கான எதுவிதமான பயிற்சிகளும் வழங்கப்படவில்லை.
- வாய்மொழி வரலாறு தொடர்பான நிறுவனத்திற்கான ஓர் கையேடு இன்மை நிதிப்பங்களர்கள் மற்றும் ஆலோசர்கள் ஊடான தொடர்பாடல் சிக்கல்களை உருவாக்கியமை. இவை பரிந்துரை செய்யப்பட்டும் அதற்கான முன்னகர்த்தல்கள் தாமதமானமையும் மனிதவளப் பற்றாக்குறையும்.

கற்றல்களும் பரிந்துரைகளும்

- இத்திட்டத்திற்கான எண்ணிமப்படுத்துவதற்கான ஊழியர் நியமிக்கப்படலாம்
- மேலதிக பதிவுக்கருவி, வேறு மாவட்டங்களுக்கு செல்வதற்கான பயண செலவீனங்களை நிதிப்பங்காளர்களிடம் பரிந்துரை செய்தல் அவசியம்
- ஊழியர்களுக்கு வாய்மொழி வரலாறு, ஆய்வு சார்ந்த பின்புலங்களை உருவாக்குதல் புதிய ஆய்வுகளை இனங்காணுவதற்கான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.
- வாய்மொழி வரலாற்றுக்கான நிறுவனத்திற்கான கையேடு ஒன்றினை விரைவாக உருவாக்குதல்
- கள ஆய்வாளகளுக்கான பயிற்சிக்குறிப்பு தொடர்பாக சப்னா இக்பால் அவர்களால் உருவாக்கப்பட்ட பயிற்சிகளை விரிவுபடுத்தல். கையேடாகவும் வரையறுக்கலாம்.
- கருவிகளை கையாள்வதில் வெளி வளவாளர்களை உள்ளீர்த்து இலகு முறைமைகளை அறிமுகம் செய்தல்.
- சவால்கள் அனுபவங்களுக்கான உடனடித்தேவைகளை நிவர்த்தி செய்தல்.
- தன்னார்வலர்களை இணைத்து ஏனைய பிராந்தியம் விடயங்களை உள்ளீர்க்க முடியும்.

பின்னிணைப்புக்கள்

[பெண்கள் ஆவணக வலைவாசல்]